**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 05.03.2026

அசல் வழக்கு எண். 16/2023

வா.சா. 2 – மகேஷ்வரன் , த/பெ. சின்னசாமி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

முருகவேலன் கிரயம் வாங்கிய சொத்து ராம் மோகன் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். ராம் மோகன் என்பவருக்கு கனகசபை முதலியார் உயில் மூலம் கொடுத்த சொத்து என்றால் சரிதான். உயில் மூலம் கொடுத்த சொத்து அளவு பொருத்துதான் கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். கிரயம் கொடுத்த சொத்துக்கு சர்வே நம்பர் தெரியுமா என்றால் தெரியாது. ராம்மோகன் கிரையம் கொடுத்த சொத்துக்கு பின் பக்கம் இருப்பது யாருடைய இடம் என்றால் அவரது அண்ணன் பன்னீர்செல்வம் என்பவருக்கு சொந்தமானது ஆகும். கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் நீங்கள் போட்டீர்களா என்றால் முதல் கையப்பம் என்னுடையதுதான். அந்த ஆவணத்தில் பின்பக்கத்தில் கனக சபை முதலியார் மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோர் இல்லம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான்கு பன்னீர்செல்வம் இருக்கிறார்கள் அடையாளத்திற்காக கனக சபை பக்கத்தில் இருக்கும் பன்னீர்செல்வம் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. வழக்கு சொத்து சுற்றி ஒரு பன்னீர்செல்வம் தான் இருக்கிறார் 3 பன்னீர்செல்வம் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு பின் பக்கத்தில் கனக சபை என்பவருக்கு சொந்தமான சொத்து இருந்ததால்தான் ஜக்குபந்தியில் குறிப்பிட்டு உள்ளார்கள் என்று சொன்னால் அடையாளத்திற்காக பன்னீர்செல்வம் பெயரை போட்டோம். கனக சபை பெயரில் சொத்து எதுவும் கிடையாது.

பின்பக்கம் உள்ள சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. ஒன்று முதல் ஐந்து வரையிலான பிரதிவாதிகள் சுற்றுச்சுவரை சேதப்படுத்தியதாக அப்பொழுது நீங்கள் அங்கு இருந்தீர்களா என்றால் இருந்தேன். சேதப்படுத்திய சொல்லும் சொத்துக்கும் முருகவேலன் சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. முருகவேலன் சொத்துதான். சுற்றுச்சுவரை கனக சபை முதலியார் என்பவருக்கு சொந்தமான சொத்து அவருக்கு அவருடைய தேவைக்காக அதனை இடித்தார் என்றால் சரியில்லை. இரண்டாம் வாதி என்னுடைய சகோதரி ஆவார். முதல் பிரதிவாதிக்கு சொந்தமான சுற்றுச்சுவரை இடித்ததால் நீங்கள் உங்கள் சகோதரிக்காக என்னுடைய மாமாவின் சொத்தை இடித்து விட்டதால் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. ஆகவே உங்கள் சாட்சி ஏற்கதக்கது அல்ல என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதியால் உங்கள் குடும்பத்திற்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram